மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.01/2019
அ.வ.எண்.301/2015

ஜெ.சரவணகுமார் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. என்.ஜெகநாதன்
2. சண்முகசுந்தரம்
3. சுரேஷ்
4. சாந்தப்பன்
5. நல்லபிரபு
6. ராஜா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. நரசம்மாள்
8. சகுந்தலா
9. மகேஸ்வரி
10. செல்வமணி ...எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 10.02.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 7ம்எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 8,9 எதிர்மனுதாரர்கள் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் உத்தேசதரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

தாவாசொத்துகள் மனுதாரரின் தாத்தா, பாட்டியான நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது. இவர்கள் தாவா சொத்துகள் குறித்து ஆவணம் ஏதும் எழுதிவைக்காமல் மனுதாரரையும், 3 பெண் மக்களையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டனர். மனுதாரருக்கு அவரது தந்தைஜெகநாதன் மூலமாக தாவா சொத்தில் பாகம் உள்ளது. ஆனால் அவருடன் சுமூக உறவு இல்லை. மனுதாரரின் தாயார் ஜெகநாதனின் முதல் மனைவி. மனுதாரரின் தந்தை ஜெகநாதன் இரண்டாவதாக விஜயா (எ) விஜயலட்சுமியை திருமணம் செய்து கொண்டார். அதனால் குடும்பத்தில் பிரச்னை ஏற்பட்டு மனுதாரரும், அவரது தாயாரும் வெளியேற்றப்பட்டனர். மனுதாரரின் பாட்டி சின்னம்மாள் உயிருடன் இருக்கும்வரை மனுதாரருக்கு உதவினார். கடந்த 19.03.1999 ல் மனுதாரரின் சம்மதம் இல்லாமலும், அவருக்கு தெரியாமலும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டனர். அதனால் பாகப்பிரிவினை கோரி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் பதிலுரையில் மனுதாரரின் நிலையை மறுத்தனர். மேற்படி நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளின் பெண் மக்கள் தங்களது சொத்துரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டனர். அதனால் தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை. ஆனால் தற்போது அவர்கள் அதனை மறுக்கிறார்கள். எனவே உத்தேச தரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

தாவா சொத்துகள் கூட்டுக் குடும்ப சொத்துகள் என கூறுவது பொய்யாகும். அதேபோல் நல்லபெருமாளுக்கும், அவருடைய மனைவிக்கும் பாத்தியப்பட்டதாக கூறுவது பொய்யாகும். மனுதாரருக்கு அவருடைய தகப்பனார் ஜெகநாதன் மூலம் வழக்கு சொத்துகளில் பாக உரிமை உள்ளது என கூறுவது பொய்யாகும். மனுதாரரின் தாயார் முதல் மனைவி என்பதும், மனுதாரரின் தகப்பனார் 2வதாக விஜயா (எ) விஜயலட்சுமியை திருமணம் செய்துகொண்டார் என கூறுவது பொய்யாகும். மனுதாரருக்கு தெரியாமலும், சம்மதம் இல்லாமலும் 19.03.1999ம் தேதியிட்ட பாக பத்திரம் ஏற்பட்டதாக கூறுவது பொய்யாகும். அதேபோல் நல்லபெருமாளின் பெண் மக்கள் தங்களுடைய உரிமையை விடுதலை செய்து கொடுத்தனர் என கூறுவது

பொய்யாகும். மனுதாரர் 1ம்எதிர்மனுதாரரின் மகன் இல்லை என்பதால் அவர் இந்த எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர் இல்லை. மேற்படி செல்வமணி 1ம்எதிர்மனுதாரரின் முதல் மனைவி இல்லை என்பதால், அவர் மூலம் 1ம்எதிர்மனுதாரருக்கு மனுதாரர் மகன் இல்லை. விஜயா (எ) விஜயம்மாள் தான் 1ம்எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி ஆவார். எனவே செல்வமணி இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் ஆவார். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம்எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) 4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2,3 5 முதல் 7 ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(இந்த எதிருரை குறிப்பாணையின் பேரில் 7ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தாவாசொத்துகள் மனுதாரரின் தாத்தா பாட்டியான நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது எனவும், இவர்கள் தாவா சொத்துகள் குறித்து ஆவணம் ஏதும் எழுதிவைக்காமல் மனுதாரரையும், 3 பெண் மக்களையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டனர் எனவும், மனுதாரருக்கு அவரது தந்தைஜெகநாதன் மூலமாக தாவா சொத்தில் பாகம் இருப்பதாகவும், அவருடன் சுமூக உறவு இல்லை எனவும், மனுதாரரின் தாயார் ஜெகநாதனின் முதல் மனைவி எனவும், இரண்டாவதாக விஜயா (எ) விஜயலட்சுமியை திருமணம்செய்து கொண்டதாகவும், அதனால் குடும்பத்தில் பிரச்னை ஏற்பட்டு மனுதாரரும், அவரது தாயாரும் வெளியேற்றப்பட்டதாக மனுதாரர் கூறுவதும் பொய்யாகும். பின்னிட்டு 19.03.1999 ல் மனுதாரரின் சம்மதம் இல்லாமலும், அவருக்கு தெரியாமலும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டதாகவும், அதனால் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் கூறுவது பொய்யாகும். எதிர்மனுதாரர்கள் பதிலுரையில் மனுதாரரின் நிலையை மறுத்ததாகவும், மேற்படி நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளின் பெண் மக்கள் தங்களது சொத்துரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டதாகவும், அதனால் தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை எனவும், தற்போது 3 பெண் மக்களையும் மனுதாரரின் தாயாரையும் வழக்கில் சேர்க்க கோரி மனுதாக்கல் செய்துள்ளதாக கூறுவதும் பொய்யாகும். மனுதாரரின் தாயார் 1ம்பிரதிவாதியான ஜெகநாதனின் முதல் மனைவி

அல்ல. 2,3 பிரதிவாதிகளின் தாயாரான விஜயா (எ) விஜயம்மாள் தான் சட்டப்படியான மனைவி ஆவார். தாவாசொத்தானது 1ம்பிரதிவாதியின் தந்தையான நல்லபெருமாளுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். நல்ல பெருமாளின் மனைவி சின்னம்மாளுக்கு எந்த ஒரு உரிமையோ, பாத்தியமோ கிடையாது. நல்ல பெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை பிரதிவாதிகள் 19.3.1999 ல் பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை பத்திரம் மூலம் பாகம் செய்துகொண்டனர். பாகப்பிரிவினையில் 1ம்பிரதிவாதிக்கு சொத்துகள் ஏதும் ஒதுக்காமல் பி ஷெட்யூலில் கண்ட குடும்ப பொது ரொக்கம் ரூ.50,000/–த்தை மட்டும் தனது பாக ஈட்டிற்காகவும், பாக சொத்திற்கு பதிலாகவும் அடைந்து கொண்டார். மேற்படி 1ம்பிரதிவாதிக்கு சொத்துகளில் பாகம் இல்லாததால் அதில் பாகம் கோர மனுதாரருக்கு உரிமையில்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கும், குடும்ப பொது நிதியிலிருந்து தலா ரூ.10,000/– ஒதுக்கப்பட்டது. மனுதாரருக்கும், மனுதாரரின் தாயாருக்கும் வழக்கு சொத்துகளில் எவ்வித சம்மந்தமும் கிடையாது. 10ம்எதிர்மனுதாரராக சேர்க்கக்கூடிய நபர் தாவாவுக்கு அவசியமற்ற நபர் ஆவார். மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் வயது விவரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 7 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் தாவாசொத்துகள் மனுதாரரின் தாத்தா, பாட்டியான நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது எனவும், இவர்கள் தாவா

சொத்துகள் குறித்து ஆவணம் ஏதும் எழுதிவைக்காமல் மனுதாரரையும், 3 பெண் மக்களையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டனர் எனவும், மனுதாரருக்கு அவரது தந்தையான 1ம்எதிர்மனுதாரர் மூலமாக தாவா சொத்தில் பாகம் உள்ளது எனவும், மனுதாரரின் தாயார் ஜெகநாதனின் முதல் மனைவி எனவும், மனுதாரரின் தந்தை ஜெகநாதன் இரண்டாவதாக விஜயா (எ) விஜயலட்சுமியை திருமணம் செய்து கொண்டார் எனவும், அதனால் குடும்பத்தில் பிரச்னை ஏற்பட்டு மனுதாரரும், அவரது தாயாரும் வெளியேற்றப்பட்டனர் எனவும், கடந்த 19.03.1999 ல் மனுதாரரின் சம்மதம் இல்லாமலும், அவருக்கு தெரியாமலும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டனர் எனவும், அதனால் பாகப்பிரிவினை கோரி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவும், நல்லபெருமாள் மற்றும் சின்னம்மாளின் பெண் மக்கள் தங்களது சொத்துரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் எனவும், அதனால் தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை எனவும், ஆனால் தற்போது அவர்கள் அதனை மறுக்கிறார்கள் எனவும், எனவே உத்தேச தரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு அவருடைய தகப்பனாரான ஜெகநாதன் மூலம் வழக்கு சொத்துகளில் பாக உரிமை உள்ளது என கூறுவது பொய் எனவும், மனுதாரருக்கு தெரியாமலும், சம்மதம் இல்லாமலும் 19.03.1999 ம் தேதியிட்ட பாக பத்திரம் ஏற்பட்டதாக கூறுவது பொய் எனவும், அதேபோல் நல்லபெருமாளின் பெண் மக்கள் தங்களுடைய உரிமையை விடுதலை செய்து கொடுத்தனர் என கூறுவது பொய் எனவும், மனுதாரர் 1ம்எதிர்மனுதாரரின் மகன் இல்லை என்பதால் அவர் இந்த எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர் இல்லை எனவும், செல்வமணி 1ம்எதிர்மனுதாரரின் முதல் மனைவி இல்லை எனவும், எனவே செல்வமணி இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம்எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 2 முதல் 7ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் 1ம்எதிர்மனுதாரரின் மகன் இல்லை என்பதால் அவருக்கு வழக்கு சொத்தில் பாகம் இல்லை எனவும், வழக்கு

சொத்துகள் கூட்டுக் குடும்ப சொத்துகள் இல்லை எனவும், நல்ல பெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை பிரதிவாதிகள் 19.3.1999 ல் பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை செய்துகொண்டனர் எனவும், பாகப்பிரிவினையில் 1ம்பிரதிவாதிக்கு சொத்துகள் ஏதும் ஒதுக்காமல் பி ஷெட்யூலில் கண்ட குடும்ப பொது ரொக்கம் ரூ.50,000/–த்தை மட்டும் தனது பாக ஈட்டிற்காகவும், பாக சொத்திற்கு பதிலாகவும் அடைந்து கொண்டார் எனவும், மேற்படி 1ம்பிரதிவாதிக்கு சொத்துகளில் பாகம் இல்லாததால் அதில் பாகம் கோர மனுதாரருக்கு உரிமையில்லை எனவும், பாகப்பிரிவினை பத்திரத்தில் 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கும், குடும்ப பொது நிதியிலிருந்து தலா ரூ.10,000/– ஒதுக்கப்பட்டது எனவும், மனுதாரருக்கும், மனுதாரரின் தாயாருக்கும் வழக்கு சொத்துகளில் எவ்வித சம்மந்தமும் கிடையாது எனவும், 10ம்எதிர்மனுதாரராக சேர்க்கக்கூடிய நபர் தாவாவுக்கு அவசியமற்ற நபர் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 7ம்எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) இம்மனுவில் வழக்கு சொத்துகள் கூட்டுக் குடும்ப சொத்துகளா, இல்லையா. மனுதாரர் 1ம்எதிர்மனுதாரரின் மகனா, இல்லையா, மனுதாரருக்கு பாகம் உள்ளதா, இல்லையா, பாகப்பிரிவினை செய்யப்பட்டதா, இல்லையா என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது என்பதால் மேற்கண்ட கட்சிகள் குறித்து இருதரப்பிலும் முன்னிலைப்படுத்திய வாதங்கள் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மனுதாரர்களால் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரியும், 19.03.1999 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(vi) இவ்வழக்கில் 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 2 முதல் 6 பிரதிவாதிகளின் சகோதரிகளான 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள்

எனவும், அவர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என கட்சி செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி 19.03.1999 பாகப்பிரிவினை பத்திரத்தில் 5 முதல் 7 தரப்பினர்களாக உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி ஆவணத்தை குறித்து மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் உத்தேச தரப்பினர்களான 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 10ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினர் செல்வமணி என்பவர் 1ம்எதிர்மனுதாரரான ஜெகநாதனின் மனைவியே இல்லை எனவும், 10ம் எதிர்மனுதாரருக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் மனுதாரர் பிறக்கவில்லை என கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் வழக்கு சொத்துகளில் 1ம்எதிர்மனுதாரர் தன்னுடைய தகப்பனார் எனவும், அவர் மூலம் வழக்கு சொத்துகளில் உரிமை ஏற்பட்டுள்ளது எனவும் வழக்காடியுள்ளார். எனவே இவ்வழக்கில் மனுதாரர், 1ம்எதிர்மனுதாரர் மற்றும் செல்வமணி ஆகியோருக்கு பிறந்தவரா என்பதை குறித்து முடிவு செய்தால் தான் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை பெற வாதி உரிமையுடையவரா என்பதை தீர்மானிக்க முடியும். எனவே மனுதாரர் 1ம்எதிர்மனுதாரர் மற்றும் உத்தேசதரப்பினரான செல்வமணியின் மகன் என்பதை நிரூபிக்கவும், இவ்வழக்கினை இறுதியாக தீர்மானிக்கவும், 10ம்எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரான செல்வமணி இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர் ஆவார். எனவே எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல எனவும், உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) இந்நிலையில் 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 7 முதல் 9 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என 29.06.2016ல் எதிர்வழக்குரையில் கூறியுள்ளதும், 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னுடைய மகன் இல்லை என கடந்த 15.07.2016ல் எதிர்வழக்குரையில் கூறியுள்ள போதும், மேற்படி உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என 2016ல் தெரிந்துள்ள போதும், அப்போதே மனுதாக்கல் செய்யாமல் 5 1/2 வருடங்கள் கழித்து மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. எனவே 1முதல் 6

எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்திற்காக மனுதாரர் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.250/– செலவுத் தொகையாக 03.03.2021 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.250/– செலவுத் தொகையாக 03.03.2021 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 04.03.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.